அசல்

20.5.1942. V. துரைசாமி.

அசல் - 1

கலை ஓங்குக.

743
20 MAY 1942
2668
3105
119-120

# கனிந்த பழந்தமிழ்ப்புலவன்!

(சோபனபுரம் - V. துரைசாமி)

(விருத்தம்)

1) ஆயிரத்தின் எல்லைமிகு மாண்டுகளின் முன்னிருந்தே அலகில் சீர்த்தித்
தாயின்மிகு மன்புடனே தமிழ்ப்பெருங்காப் பியங்களெனுந் தனயன் மாரைப்
பாயிருளாம் அஞ்ஞான மகன்றிடவுச் சங்கமெனும் பரந்த இல்லிற்
வாயதனுற் பெற்றெடுத்தாள்! வளர்த்திடுமுன் வான்சேர்ந்தாள் வளமை
மிக்காள்!

2) தாயின்முகங் காணாது தனயர்களாங் காப்பியங்கள் தனித்து வாடி
நேயமிகத் தமைப்புரப்பார் தமிழுலகி லில்லாமை நினைந்த ரற்றி
ஆயிரமாண் டுகள்காறும் வெறுநிலத்திற் கிடந்ததனு லங்க மெல்லாம்
பாய்கரையான் விழுங்கிடவே துடிதுடித்துப் பதறியதைப் பகரற் பாற்றோ!

3) நத்தியசீர் வேங்கடந்தென் குமரியிடைத் தமிழுலக நயந்து செய்த
உத்தமநற் றவமதனுற் றமிழன்னை உளங்களிக்க உலக முய்ய
உத்தமதா னப்பதியி லகத்தியனே தமிழ்ப்புரக்க உதித்தா னென்னுஞ்
சத்தியமே உருவாகிச் சாமிநா தப்பேரான் சார்ந்தான் மண்மேல்.

4) அஞ்சேல்நும் முயிர்காப்பேன்! அஞ்சேல்!என் றபயமளித் தருள்சு ரந்து
மஞ்சேபோல் தன்னுயிரைத் தன்பொருளை மதியாது மாநி லத்தில்
எஞ்சாது செவிலியெனக் காப்பியமாங் குழந்தைகளை யெடுத்த ணைத்துத்
துஞ்சாதே இரவுபகல் நோய்தீர அமுதூட்டித் துயர்களைந்து.

அசல்

20.5.1942. V. துரைசாமி.

அசல் — 1

(2)

5) பல்லாண்டு பரிந்தளித்துப் பைந்தமிழின் இனிமையினைப் பலர்க்கு மூட்டக்
கல்லாத மூடருக்குங் கற்றறிந்த புலவோர்க்குங் காதல் கூர
எல்லார்க்கும் மெய்க்காவு மேதமறக் கிடைவிதளா மின்பத் தேனை
வல்லாள னளித்தனன்! அவ் வல்லமையே யொருவருக்கும் வாரா தம்மா!

6) எண்பத்தா றாமாண்டின் எல்லைவரை யவன்காணா ஏடொன் றில்லை
விண்பத்தா தவன்படித்த விங்கிலத் தமிழ்நூல்கள்! வினவு கின்ற
நண்பத்தார் தமக்குமன்றி நானிலத்தில் யாவருக்கும் நயந்தே யன்பாய்
மண்பத்தா தெனும்பொறுமை மாட்சியினால் அருளும்வகை மகிழற் பாற்றே!

7) கனிந்தபழந் தமிழ்ப்புலவன்! புரவலன்! செந் நாவலவன்! கான லோலன்!
இனித்தமுகத் தியலிசையோன்! இதுறுமன் னவராலும் நத்துஞ் சீர்த்தித்
தனித்தபுக ழிரத்தினமாம் திராவிடத்தின் பூஷணன்! நற் சாமி நாதன்!
தனித்தனன்! அவ் வானுலகில்! தண்டமிழீர்! அவனின்றி ஏங்கு
வீரே!

~~~~ x ~~~~

விலாசம்:—
V. துரைசாமி,
C/o கிருஷ்ணவிலாஸ் ஹோட்டல்
பஜார் தெரு
திருவையாறு
~~~~